# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 74/2017/மா

ஆணை எண்: 257/2017

நாள்: 10/11/2017

| | | |
|---|---|---|
| **11.04.2017 நாளிட்ட தினமலர் நாளிதழ் செய்தி** | - | **இம்முறைமன்ற நடுவத்தால் தாமாகவே முறையீடாகப் பதிவு செய்யப்பட்டது.** |
| **மண்டல அலுவலர், மண்டலம் –12, ஆலந்தூர், பெருநகர சென்னை மாநகராட்சி.** | - | எதிர் மனுதாரர் |

## ஆணை

11.04.2017 நாளிட்ட தினமலர் நாளிதழில் "மேற்கூரை இல்லாத உடற்பயிற்சி மையம்" எனும் குறுந்தலைப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆலந்தூர் மண்டலம் குறித்து வரப்பெற்ற செய்தியினை 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7–ன்படி இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முறையீடாகப் பதிவு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டது.

2) இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.74/2017/மா நாள்:13.04.2017ல் மேற்படி பத்திரிக்கைச் செய்தியில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பான உண்மை நிலை மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த பதில் உரையை தொடர்புடைய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க ஆலந்தூர் மண்டலம் –12ன் மண்டல அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

3) பெருநகர சென்னை மாநகராட்சி, 12வது மண்டலம், வார்டு எண்.167, நங்கநல்லூர் 100 அடி சாலையோரத்தில் அமைந்துள்ள சாலையோர உடற்பயிற்சி மையம் ரூ.9.93 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு 28.8.2015 அன்று நிறைவு பெற்று, பயன்பாட்டிற்கு கொண்டு

வரப்பட்டதென்றும், நாளிதழில் பிரசுரமான இவ்விளையாட்டு பயிற்சி மையம் 12.12.2016 அன்று தாக்கிய வார்தா புயலின் போது பலத்த சேதமடைந்த மேற்கூரை மற்றும் சுற்றுச்சுவர் ரூ.3.35 லட்சம் மதிப்பீட்டில் சீர்செய்யப்பட்டுவிட்டது என்றும் மேற்படி பயிற்சி மையம் நல்ல முறையில் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்றும் ஆலந்தூர் மண்டல அலுவலர் தமது 26.4.2017 மற்றும் 07.11.2017 அறிக்கைகளில் தெரிவித்துள்ளார்.

4) எனவே, நாளிதழில் வார்தா புயலினால் பலத்த சேதமடைந்து, மேற்கூரை இல்லாத உடற்பயிற்சி மையம் எனக் குறிப்பிடப்பட்ட பயிற்சி மையம் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கூறியவாறு சீர்செய்யப்பட்டு நன்முறையில் பயன்பாட்டில் இருந்து வருவதாகத் தெரிய வருவதன் அடிப்படையில் இந்நேர்வில் நடவடிக்கைகளை நிறைவு செய்து ஆணையிடப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10–ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.
15/11/17

15/11/17

15/11/17

பெறுநர்

மண்டல அலுவலர்,
மண்டலம் –12, பெருநகர சென்னை மாநகராட்சி,
ஆலந்தூர், சென்னை – 600 016.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சிப் பிரிவு –3,
இ.கோ./உதிரி –3